இந்த அவையினுடைய கவனத்தை ஈர்த்து என்னுடைய எதிர்ப் பாகச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டத்தினுடைய தமிழ் பதிப்பிலே 60 ஆம் பக்கத்திலே பல ஊர்களைப் பற்றி சொல்லி யிருக்கிறார்கள். ஆனால், திருநெல்வேலியில் தென்காசியைச் சார்ந்த..............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எந்த ஊர் விட்டுப்போனது என்பதைப் பற்றி டிஸ்கஷனிலே பேசலாம்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற் றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள பயிரிடு குத்தகை தாரர்கள் (தற்காலிக நிவாரணம்) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர் மானத்தை மொழிகிறேன்:—

'' தமிழ்நாடு 1986-ஆம் ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட பகுதிகளிலுள்ள பயிரிடு குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரணம்) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற் றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(இ) திறந்த வெளிகள் (அழகைக் குலைத்தலைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன் வடிவு, 1986.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—